ALPHA MIND POWER

# NEWSLETTER



December 2018

## From Guruji's desk....



My Dear Alpha Siddha,

We have come to the last month of this year 2018. It is unbelievable how time flies. We are already thinking about the new year.

Time keeps moving very fast. But, you have to stop for a while and reflect on your life. What did 2018 give you? Achievements? Happiness? Lessons? Insights? Changes? If you think about it, I am sure you will see more about your own life. Time will keep flying whether you are conscious about it or not. But, if you are conscious and aware about what is happening in your life, then the same time can move more meaningfully and make your life that much better.

Take some time to plan what you wish to achieve or experience in the upcoming year. Only when the mind is focused can you achieve anything, be it materialistic goals or spiritual awakening. Mindfulness is what you need to practice.

How do you do that? Be aware of your own thoughts, words and actions. Be more responsible for them. Be willing to bring about the changes that are needed. That way you will blossom into a more mature person, enjoying the essence of every aspect of life.

It is when I see some people who do not seem to understand this that I feel really sad. The human race has seen so much improvement in technology and science. However, when it comes to attitude and behavior, I wonder whether we are improving or moving backwards.

Last week I was travelling from Chennai to Bengaluru. We were waiting at the airport for the boarding announcement. The flight which was earlier preponed by 15 minutes, now seemed to be delayed due to operational reasons. Many were asking the ground staff when the flight will depart. They were also helpless but kept giving some answers.

All of a sudden two gentlemen, both educated and seemingly cultured, one of them a doctor, started screaming at the ground staff using abusive language. Even the pilots who were waiting for the flight to land, tried to pacify the passengers. But, both of them kept screaming at the pilots too. It was really a shame to watch this scene. On top of everything, there was a person filming this whole event. Probably it was later posted on social media.

What are we coming to? If a flight gets delayed, the ground staff cannot do anything about it. Ofcourse, passengers are inconvenienced. But, that does not give us the right to scream and shout at the staff there. If education does not give a person the maturity to understand the situation, then what is the point?

All of us face such situations in various walks of life. But, my request to you is that as an Alpha Siddha, be more in control of your emotions. Be more mature. Respond to any situation, do not react. Words spoken in haste can never be taken back.

Only a person who is harboring a lot of anger and stress within himself will throw it upon others at the slightest provocation. An Alpha Siddha should experience only peace and happiness within. As an Alpha Siddha you will remain calm no matter what the situation is. Let this be your New Year resolution. And the only way to achieve this is to meditate regularly and stay connected with higher energies.Let us be more responsible human beings.

Wishing you a great year ahead! Happy New Year!
Blessings,

**Srimatha**



***Guruji with Alpha Siddhas at Aishwaryam workshop in Chennai***



***Guruji with Alpha Siddhas at Anubandham workshop in Bengaluru***

அன்புள்ள ஆல்ஃபா சித்தரே,

இவ்வருடத்தின் கடைசி மாதத்தில் இருக்கிறோம். நாட்கள் எவ்வளவு வேகமாக கடந்து செல்கின்றன என நினைத்தால் ஆச்சரியமாக இருக்கிறது. அடுத்து வரும் புது வருடத்தைப் பற்றி இப்பொழுதே நினைக்க துவங்கி விட்டோம்.

நாட்கள் வேகமாக நகர்கின்றன. ஆனால் நீங்கள் சற்று நிதானித்து உங்கள் வாழ்க்கையைப் பற்றி நினைத்துப் பார்ப்பது அவசியம். 2018 உங்களுக்கு அளித்தது என்ன? சாதனைகளா? சந்தோஷமா? பாடங்களா? புரிதலா? மாற்றங்களா? சற்று யோசித்தால் உங்கள் வாழ்க்கையை இன்னும் சற்று சரியாக புரிந்து கொள்வீர்கள். நீங்கள் உணர்ந்தாலும் இல்லையென்றாலும் காலம் நகர்ந்து கொண்டு தான் இருக்கும். ஆனால் உங்கள் வாழ்க்கையைப் பற்றிய உணர்வுடன் நீங்கள் இருந்தீர்களானால் அதே காலம் இன்னும் அர்த்தமுள்ள விதத்தில் நகரும். வாழ்க்கையும் சிறப்பாக இருக்கும்.

வரும் புதிய வருடத்தில் என்ன சாதிக்க வேண்டும் அல்லது எந்த மாதிரி அனுபவங்கள் வேண்டும் என விரும்புகிரீர்கள் என்பதை திட்டமிடுங்கள். இலட்சியங்களோ ஆன்மீக விழிப்புணர்வோ, உங்கள் மனதில் தெளிவு இருந்தால் மட்டுமே அடைய முடியும். அந்த மனத் தெளிவு தான் உங்களுக்கு தேவை.

அதை அடைவது எப்படி? உங்கள் எண்ணம், வாக்கு, செயல்களை பற்றிய உணர்வுடன் இருங்கள். அவற்றிற்க்கு பொறுப்பு ஏற்றுக் கொள்ளுங்கள். அதில் தேவையான மாற்றங்களை கொண்டு வர தயாராக இருங்கள். அப்பொழுது தான் நீங்கள் பண்பட்ட ஒரு மனிதராக வளர்ந்து வாழ்க்கையின் சாராம்சத்தை முழுமையாக உணர முடியும்.

இதை புரிந்து கொள்ளாதவர்களைப் பார்க்கும்பொழுது தான் மனம் வேதனைப்படுகிறது. மனித இனம் விஞ்ஞானத்திலும் தொழில் நுட்பத்திலும் எவ்வளவோ முன்னேற்றத்தை பார்த்துவிட்டது. ஆனால் மனிதர்களின் சில நடவடிக்கைகளை பார்க்கும்பொழுது நாம் உண்மையாகவே முன்னேறுகிறோமா அல்லது பின்னோக்கி செல்கிறோமா என்று சந்தேகமாக இருக்கிறது.

சென்ற வாரம் நான் சென்னையிலிருந்து பெங்களூருக்கு பயணம் செய்து கொண்டிருந்தேன். விமானத்தில் ஏறுவதற்காக ஏர்போர்ட்டில் காத்திருந்தோம். 15 நிமிடங்கள் முன்பாக புறப்படும் என அறிவித்திருந்த விமானம் கால தாமதமாக புறப்படும் என்று தெரிந்தது. பலர் அங்கு வாசலில் நின்றிருந்த ஊழியர்களிடம் விமானம் எப்பொழுது புறப்படும் என்று கேட்டுக் கொண்டே இருந்தார்கள். அவர்களும் தங்களால் இயன்றவரை பதில் சொல்லிக் கொண்டு இருந்தார்கள்.

திடீரென்று இரண்டு ஆண்கள், படித்தவர்கள், அதில் ஒருவர் டாக்டரும் கூட, அங்கிருந்த ஊழியர்களை தகாத வார்த்தைகளால் திட்ட ஆரம்பித்துவிட்டார்கள். அங்கு காத்திருந்த விமான ஓட்டிகள் இருவரும் அவர்களை சமாதானப்படுத்த எவ்வளவோ முயற்சித்தாலும் அவர்களையும் தவறான வார்த்தைகளால் சாடினார்கள். இதை பார்க்கவே அவமானமாக இருந்தது. எல்லாவற்றையும் விட அங்கு நடப்பதை ஒருவர் படம் பிடித்துக் கொண்டிருந்தார். பின்னர் அதை மீடியாவில் போட்டிருப்பார் என நினைக்கிறேன்.

நாம் எதை நோக்கி போய்க் கொண்டிருக்கிறோம்? ஒரு விமானம் புறப்பட கால தாமதமானால் விமான நிலையத்தில் இருக்கும் ஊழியர்கள் எதுவும் செய்ய முடியாது. பிரயாணிகளுக்கு அசௌகரியம் தான். ஆனால் அதற்காக அந்த ஊழியர்களை திட்டவோ தவறான வார்த்தைகளை பிரயோகிக்கவோ யாருக்கும் உரிமை இல்லை. படிப்பு என்பது ஒரு மனிதருக்கு யதார்த்த நிலைமையை புரிந்துகொள்ளும் பக்குவத்தை தரவில்லை என்றால் என்ன பிரயோஜனம்

நாம் எல்லோரும் ஏதோ ஒரு சமயத்தில் இது போன்ற சூழ்நிலைகளை சந்திக்கிறோம். என்னுடைய வேண்டுகோள் ஒரு ஆல்ஃபா சித்தர் என்ற முறையில் உங்கள் உணர்வுகளை எப்பொழுதும் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளுங்கள். பக்குவமாக நடந்து கொள்ளுங்கள். எந்த சூழ்நிலையிலும் நிதானத்துடன் நடந்து கொள்ளுங்கள். கொட்டிய வார்த்தைகளை திரும்ப அள்ள முடியாது.

தனக்குள் மிக அதிகமான மன அழுத்தத்தையும் கோபத்தையும் அடக்கி வைத்திருப்பவரே ஒரு சிறிய காரணம் கிடைத்தாலும் அதை மற்றவர்கள் மீது அள்ளி தெளிப்பார். ஒரு ஆல்ஃபா சித்தரின் மனதில் அமைதியும் சந்தோஷமும் மட்டுமே நிறைந்திருக்க வேண்டும். எந்த சூழ்நிலையிலும் ஒரு ஆல்ஃபா சித்தர் அமைதியாகவே இருக்க வேண்டும். இதுவே உங்கள் புதுவருட தீர்மானமாக இருக்கட்டும். இதற்கு ஒரே வழி தினமும் தியானம் செய்து உயர்ந்த சக்திகளுடன் எப்பொழுதும் தொடர்பில் இருப்பதே ஆகும். பொறுப்பு உணர்ந்த மனிதர்களாக நாம் இருப்போம்.

உங்களுக்கு எனது மனம் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்!

ஆசீர்வாதங்கள்,

**ஸ்ரீமாதா**

**COMING SOON!**

Level 1 Class will soon be available in ONLINE.

**விரைவில் துவங்கவுள்ளது!**

கட்டம் 1 வகுப்பு விரைவில் ஆன்லைன் மூலம் துவங்கவிருக்கிறது

I had Attended Aishwaryam class on 11.11.2018. I was waiting for an amount to be credited by a person. I took lot of steps and made lot of calls but they didn't respond.It gave me a lot of stress.After attending the class within three days the amount got credited. Thank you Guruji.

***Hari***




நான் கடந்த 11.11.2018 அன்று ஐஸ்வர்யம் வகுப்பில் கலந்துகொண்டேன். என்னிடம் பல நாட்களுக்கு முன்பு கடன் வாங்கியவர் திருப்பி தரவேயில்லை. போன் செய்தாலும் எந்தவித பதிலும் இல்லை. ஐஸ்வர்யம் தியான பயிற்சியில் கலந்துகொண்ட அடுத்த 3 நாட்களிலேயே அவரிடமிருந்து பணம் எனக்கு திரும்ப கிடைத்துவிட்டது. குருஜிக்கு நன்றி!

**ஹரி**

Namaste Guruji, have attended Aishwaryam class in March at Bangalore and prayed for new house and kept visualizing same in day today meditation. With Guruji's blessing we have completed house warming ceremony and living happily. Thanks to Guruji and Alpha!

***Ramaselvi, Bangalore***

குருஜிக்கு நன்றி! மார்ச் மாதம் பெங்களூருவில் நடந்த ஐஸ்வர்யம் வகுப்பில் கலந்துகொண்டேன். எனக்கு புது வீடு வாங்கவேண்டும் என்ற இலட்சியம் நிறைவேறுவதற்காக தொடர்ந்து ஐஸ்வர்யம் தியானம் வகுப்பிலும் அதற்கு பிறகும் செய்துவந்தேன். குருஜியின் ஆசீர்வாதத்தால் இப்பொழுது நாங்கள் புது வீடு கிரகப்பிரவேசம் முடிந்து சந்தோஷமாக வாழ்ந்துகொண்டிருக்கிறோம். குருஜிக்கும் ஆல்ஃபாவிற்கும் நன்றி!

**ராமசெல்வி, பெங்களூரு**

I had attended Aishwaryam workshop in Trichy. For the past 3 months my husband's salary was not credited. On the next day morning after class itself we received the message that my husband's salary got credited in his account . We are very happy. Thanks to Alpha and Guruji!

***Kanmani, Trichy***

நான் திருச்சியில் நடந்த ஐஸ்வர்யம் வகுப்பில் கலந்துகொண்டேன். கடந்த 3 மாதங்களாக என் கணவருக்கு சம்பளத் தொகை வங்கியில் வரவுவைக்கப்படாமல் இருந்துவந்தது. ஐஸ்வர்யம் வகுப்பில் கலந்துகொண்ட அடுத்த நாளே என் கணவரின் மொபைலுக்கு சம்பளத் தொகை வைப்பு வந்துவிட்டதாக செய்தி கிடைத்தது. எங்களுக்கு மிகுந்த சந்தோஷம்.

**கண்மணி, திருச்சி**

I have attended Anubandham class at Coimbatore. I am practicing my Anubandham meditation at home. I never talked with my nextdoor neighbor for a long time because they are unhappy with me for different reasons. Today I talked with her nicely and she is very happy about the conversation. Thanks to Srimatha.

***Devika Alagan***

சில பிரச்சினைகளின் காரணமாக பக்கத்து வீட்டில் உள்ளவர்கள் என்னிடம் பேசாமல் இருந்துவந்தார்கள். நான் கோவையில் அனுபந்தம் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து பயிற்சி செய்துவந்தேன். இன்று அவரிடம் பேசினேன். மிகவும் மகிழ்ச்சியாக பேசினார்கள். ஸ்ரீமாதாவிற்கு நன்றி!

**தேவிகா அழகன்**

I always wonder, how Guruji designs every level and how much efforts and testing would have been done !!!!!!Really amazing. We are really blessed Guruji.Those who have completed all levels including Anubandham would definitely agree with me.I actually visualised in Anubhandham class, that I was in my father's hands after delivery.And from then on to my childhood and to adulthood.I could visualise everything. Such a wonderful experience.I really gave a pat to my "child" in me and gave a fillip to him.He is very happy now. THANKS GURUJI

***Mohan Krishnamurti***

நமது குருஜி ஒவ்வொரு வகுப்புகளை உருவாக்கும்பொழுது அதற்காக எவ்வளவு முயற்சிகள் மற்றும் ஆய்வுகள் செய்திருப்பார் என்று நான் வியந்திருக்கிறேன்!!!

எல்லா வகுப்புகளையும் அனுபந்தம் உட்பட முடித்தவர்கள் அனைவரும் குருஜியால் ஆசி பெற்றுள்ளோம் என்பது உண்மை. அனுபந்தம் தியானத்தின்பொழுது நான் பிறந்தவுடன் என் தந்தையின் கையில் இருப்பதை நன்கு உணரமுடிந்தது. பிறகு குழந்தை பருவம் முதல் இளமைப் பருவம் வரை நான் எப்படி இருந்தேன் என்பதையும் உணரமுடிந்தது. எனக்குள் இருக்கும் குழந்தையை நான் தட்டிக்கொடுத்தேன். இப்பொழுது எனக்குள் இருக்கும் குழந்தை சந்தோஷமாக இருக்கிறது.

**மோகன் கிருஷ்ணமூர்த்தி**

I attended Anubandham in Coimbatore. It is so excellent Madam.I felt very light after doing Anubandham. I could easily apologise to everyone in my life. Moreover, after doing Anubandham I completely forgot some worst moments. Inner child meditation is really awesome madam.I felt like a new born baby!

***Subashree***

நான் கோவையில் அனுபந்தம் வகுப்பில் கலந்துகொண்டேன். மிக அருமையான வகுப்பு. அனுபந்தம் தியானம் செய்த பிறகு என் மனம் மிக லேசாகிவிட்டதை உணர்ந்தேன். இப்பொழுது என்னால் அனைவரையும் எளிதில் மன்னிக்கமுடிகிறது. மேலும் என் வாழ்க்கையில் நிகழ்ந்த கசப்பான சம்பவங்களை மறக்கமுடிந்தது. எனக்குள் குழந்தை தியானத்தின் மூலம் நான் ஒரு குழந்தையாகவே மாறிவிட்டதை உணர்ந்தேன்

**சுபஸ்ரீ**

## ANNOUNCEMENT

**‘KELAI MANAME’**
GURUJI’S PROGRAM ON POTHIGAI TV !
7.15 am Monday to Friday
You can also watch from mobile app **‘DD POTHIGAI LIVE’**

---

## அறிவிப்பு

**கேளாய் மனமே**

பொதிகை டிவியில் குருஜியின் நிகழ்ச்சி!
காலை 7.15 மணிக்கு திங்கள் முதல் வெள்ளி வரை
மொபைல் ஆப் **‘DD POTHIGAI LIVE’** மூலமும் காணலாம்.

## ONLINE PAYMENT

You can now download mobile app INNOTYM to make any payments to AMP for workshops or products.
You can also pay through our website Payment Gateway

**ஆன்லைன் கட்டணம்**

INNOTYM ஆப் உங்கள் மொபைலில் பதிவிரக்கம் செய்து AMP வகுப்புகள் அல்லது பொருட்களுக்கு சுலபமாக கட்டணம் செலுத்தலாம்.
நமது இணையதளத்தின் மூலமாகவும் கட்டணம் செலுத்தலாம்.

# Workshops Schedule

| CITY | WORKSHOP | DATE | DAY | TIME | VENUE |
|---|---|---|---|---|---|
| Madurai (Tamil) | **TEJAS CHAKRA**<br>**AISHWARYAM** | 01/12/2018<br>02/12/2018 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel GRT Regency<br>38, Madakulam Rd,Palanganatham, Madurai. |
| Dubai (English) | **AISHWARYAM** | 08/12/2018 | Sat | **3.00pm to 8.30pm** | Namaste Yoga Centre,<br>54 Amman Street, Al Nahda 2, Dubai UAE |
| Goa (English) | **AISHWARYAM**<br>**ANUBANDHAM** | 12/01/2019<br>13/01/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel Mandovi, D B Marg,<br>Panaji, Goa |
| Chennai (Tamil) | **TEJAS CHAKRA**<br>**PSYCHIC ENERGY** | 19/01/2019<br>20/01/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel Residency Towers,<br>Pondy Bazaar, T. Nagar,Chennai. |
| Salem (Tamil) | **SRIVIDYA**<br>**AISHWARYAM** | 26/01/2019<br>27/01/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel CJ Pallazzio,<br>201/6, Junction Main Road, [Near NH-7]<br>Salem – 636005 |
| Trichy (Tamil) | **PSYCHIC ENERGY**<br>**ANUBANDHAM** | 02/02/2019<br>03/02/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel Breeze Residency,<br>Mc Donalds' Road, Trichy |
| Chennai (Tamil) | **ALPHA MEDITATION LEVEL-1** | 10/02/2019 | Sun | 9am to 5pm | Hotel Residency Towers,<br>Pondy Bazaar, T. Nagar,Chennai. |
| Mumbai (English) | **SRIVIDYA**<br>**PSYCHIC ENERGY** | 23/02/2019<br>24/02/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | TO BE CONFIRMED |


*Printed & Published for*

ALPHA MIND POWER™

***Srimatha Vijayalakshmi Panthaiyan***
***ALPHA MIND POWER***
*No.4, Abusali Street, Saligramam,*
*Chennai - 600093. INDIA*
*Phone: 044-23760007*
*Mobile:9841402000, 9841696664*
*E-Mail: amp@alphamindpower.net*
*Website: www.alphamindpower.net*


***PRINTED MATERIAL***